செய்தி வெளியீடு எண்: 545 நாள்:27.08.2019

## செய்தி வெளியீடு

## இளம் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டம்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தகுதிவாய்ந்த இளம் கலைஞர்களுக்குக் கலை நிறுவனங்களின் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் வழங்கும் திட்டத்தின்கீழ், இளம் கலைஞர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு தமிழகத்தில் சிறப்புடன் செயல்படும் கலை நிறுவனங்களின் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகளை நடத்திட வாய்ப்புகள் வழங்கி ஊக்குவித்து வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் பரதநாட்டியத் துறையில் 16 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட இளம் கலைஞர்களுக்கும், இசைத்துறையில் குரலிசை, வீணை, புல்லாங்குழல், ஜலதரங்கம், தனிவயலின், கோட்டு வாத்தியம், கிளாரினேட், கிதார், மாண்டலின், சாக்சபோன், கதா காலட்சேபம், நாதசுரம் ஆகிய பிரிவுகளைச் சார்ந்த இளம் கலைஞர்களுக்கும், பக்கவாத்தியங்களான வயலின், மிருதங்கம், கஞ்சிரா, கடம், முகர்சிங், மற்றும் கொன்னக்கோல் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 16 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட இளம் கலைஞர்களுக்கும், தமிழகத்தில் நன்முறையில் இயங்கும் கலை நிறுவனங்களின் வாயிலாகத் தலா நான்கு கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இக்கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் நடத்திட கலை நிறுவனங்களுக்கு நிதியுதவியும், கலைஞர்களுக்கு மதிப்பூதியமும் மன்றத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் கடந்த பல ஆண்டுகளில் மன்றத்தால் தேர்வு செய்யப்பட்ட கலைஞர்கள் தற்போது முன்னணிக்கலைஞர்களாக விளங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 2018–2019 ஆம் ஆண்டிற்கான இளம் கலைஞர்களை 2019, ஆகஸ்ட் திங்கள், 1 மற்றும் 2 ஆகிய தேதிகளில், கலைமாமணி பேராசிரியர் திரு. சி. வி. சந்திரசேகர், கலைமாமணி திருமதி மீனாட்சி சித்தரஞ்சன், கலைமாமணி திருமதி பார்வதி ரவி கண்டசாலா ஆகிய வல்லுநர்கள் கொண்ட

குழுவால் நேர்காணல் நடத்தப்பெற்றதில், பரதநாட்டியத் துறையைச் சேர்ந்த பின்வரும் இளம்கலைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**<u>பரதநாட்டியம்</u>**

1. செல்வி மயுரா பாலகுருநாதன், சென்னை.
2. செல்வி திவ்யா பாலசந்திரன், மும்பை
3. செல்வி என். மீனாக்ஷி, சென்னை.
4. செல்வன் ச. ஜெயவீரபாண்டியன், கிருஷ்ணகிரி.
5. செல்வி சி. எஸ். பாவனா, சென்னை.
6. செல்வி நிவேதிதா சங்கரநாராயணன், சென்னை.

2019, ஆகஸ்ட் திங்கள், 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில், கலைமாமணி திரு.டி.வி.கோபாலகிருஷ்ணன், கலைமாமணி திரு.டி. என்.சேஷகோபாலன், கலைமாமணி திரு. மாம்பலம் எம்.கே.எஸ். சிவா ஆகிய வல்லுநர்கள் கொண்ட குழுவால் நேர்காணல் நடத்தப்பெற்றதில், இசைத் துறையைச் சேர்ந்த பின்வரும் இளம்கலைஞர்கள் இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**<u>குரலிசை</u>**

1. செல்வி ம. சரண்யா, கோவை.
2. செல்வன் உ. எத்திராஜன், காஞ்சிபுரம்.
3. செல்வன் க. கிரிதரன், சென்னை.
4. செல்வன் தனுஷ், சென்னை.
5. செல்வி ம. வசுப்ரதா, சென்னை.
6. செல்வி கா. பாரதி, சென்னை.
7. செல்வி ல. ஸ்ரீவித்யா, சென்னை.

**<u>தனி வயலின்</u>**

1. செல்வன் டி. கிஷோர், சென்னை.

**<u>பக்கவாத்தியம்</u>**
**<u>மிருதங்கம்</u>**

1. செல்வன் வெ. பாலாஜி, சென்னை.
2. செல்வன் ஆர். ஸ்ரீகாந்த், சென்னை.

**<u>கஞ்சிரா</u>**

1. திருமதி ஜி.எம். க்ருஷ்ணப்ரியா, சென்னை.

**<u>நாதஸ்வரம்</u>**

1. செல்வன் ஆர். தேவராஜுலு, சென்னை.
2. செல்வன் டி. ஐயப்பன், திருவள்ளூர்.
3. செல்வன் எம். மோகன், திருவள்ளூர்.
4. செல்வன் எம். வெங்கடேஷ்வரன், சென்னை.

உறுப்பினர்–செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**